**நாம் ஏன் பழைய ஏற்பாட்டை நிராகரிக்கக் கூடாது?**
Thursday Bible Study
ACA Avadi Church
21 March 2024

**சங்கீதம் 119:18**
18. உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.

**I கொரிந்தியர் 14:20**
20. சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள்; துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்.

**I தீமோத்தேயு 4: 13**
13. நான் வருமளவும் **வாசிக்கிறதிலும்** புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு.

**நாம் ஏன் பழைய ஏற்பாட்டை நிராகரிக்கக் கூடாது: (தவிர்க்கக் கூடாது)**
**பழைய ஏற்பாடு என்கிறதானே வார்த்தையிலுள்ள முதல் வார்த்தை(பழைய) கிறிஸ்தவர்களுக்கு முக்கியமற்றது அல்லது சிறப்பற்றது என்று தவறுதலாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது** .

• மத்தேயு சுவிசேஷ புத்தகத்தில், "இதையெல்லாம் நீங்கள் புரிந்து கொண்டீர்களா?" என்ற கேள்வியோடு இயேசு தமது சீடர்களிடத்தில் தன்னுடைய நீண்ட தொடர் உவமை பிரசங்கத்தை முடித்தார் அதற்கு அவர்கள் "ஆம்" என்று பதிலளித்தார்கள்.
• பின்னர் இயேசு தனது போதனையை முடிக்கிறார்

**மத்தேயு 13: 51–52**
51. பின்பு, இயேசு அவர்களை நோக்கி: **இவைகளையெல்லாம் அறிந்துகொண்டீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம், அறிந்துகொண்டோம்**, ஆண்டவரே, என்றார்கள். 52.
அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இப்படியிருக்கிறபடியால்,
பரலோகராஜ்யத்துக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக்கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் என்றார்.

• எல்லா கிறிஸ்தவர்களும் பழைய ஏற்பாட்டை "பொக்கிஷமாக" கருதுவதில்லை,
• இருப்பினும் சிலர் பழைய ஏற்பாட்டை முற்றிலும் நிராகரிக்கிறார்கள்.
• மற்றவர்கள் புதிய ஏற்பாட்டில் உள்ள ஒரு பத்தியை பழைய ஏற்பாட்டில் உள்ள வசனம் விளக்குவதாய் (ஒளிர செய்வதாய்) இருந்தால் ஒழிய அதை வெறுமனே தவிர்த்து விடுகிறார்கள்.
• சிலர் பழைய ஏற்பாட்டை கடினமான, அன்பற்ற, சட்ட ரீதியான ஏற்பாடாக, குறைத்து மதிப்பீடு செய்து (சித்தரித்து) அவைகளை நாம் அனைவரும் விட்டுவிடுவதை குறித்து மகிழ்ச்சியடைய வேண்டும் என்கின்றனர் .

**பவுல் எபேசுவிலுள்ள மூப்பர்களுக்கு...,**

**அப்போஸ்தலர் 20:25 – 27**

25. இதோ, நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம்பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன். 26. **தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே,** 27. எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன்.

**எபிரெயர் 8:13**

13. புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது.

- பழைய உடன்படிக்கை ஆராதணையானது ஆலயத்தோடும், மிருக பலிகளோடும் மற்றும் பூமிக்குரிய ஆசாரியர்களோடும் இருந்தது. இப்பொழுதோ அவை அனைத்தும் **கிறிஸ்துவில்** நிறைவேறியது.
- ஆனால் பழைய உடன்படிக்கையின் முறைமையில் உள்ள சில ஒழுக்க விதிகள் குறிப்பாக 10 கட்டளைகள் போன்றவை நிலையான தொடர்பு (இணக்கமான) கொண்டவை.
- எல்லாவற்றுக்கும் மேலாக ஒழுக்க விதியின் (தேவனின் சொந்த சுபாவம்) அடித்தளம் மாறவில்லை.

**ஏன் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு பழைய ஏற்பாடு முக்கியமானது?**

**1. பழைய ஏற்பாடு நமது வேதத்தில் கிட்டத்தட்ட நான்கில் மூன்று பங்கு கொண்டுள்ளது (75.55 சதவீதம்).**

வேதத்தின் நீளம் முழுமைக்கும் பழைய ஏற்பாடு தேவனுக்கு முக்கியமானது என்பதை நாம் காணலாம். புதிய ஏற்பாட்டில் இயேசுவில் நாம் காணும் நிறைவேறுதலுக்கு அடித்தளமாக தேவனின் முதல் விசேஷ வெளிப்பாடாக பழைய ஏற்பாடு அமைகிறது.

**2. பழைய ஏற்பாடு தான் "உலகம், மனிதர்கள், சுவிசேஷம்," போன்றவற்றின் ஆரம்பத்தையும் தோற்றத்தையும் உள்ளடக்கி உள்ளது.**

- "ஆதியாகம" புத்தகத்தில் ( " தோற்றம், ஆதாரம், ஆரம்பம்", என்கிறதான கிரேக்க வார்த்தையின் அர்த்தத்திலிருந்து) வானம், பூமி, மிருகங்கள் மற்றும் மனிதர்கள் உருவான விதத்தை குறித்து தெளிவான முறையில் விவரிக்கப்பட்டுள்ளது (தீட்டப்பட்டுள்ளது) (ஆதி 1–2).
- பழைய ஏற்பாடு தான் நமக்கு திருமணம், பாவம், தேவனை விட்டு பிரிந்து போகுதல், பலி, பாடுகள், மரணம் ஆகியவற்றின் தோற்றத்தின் ஆரம்பத்தை விவரித்துச் சொல்கிறது.
- மேலும் ஆதியாகமத்தில் தான் பல்வேறு மொழிகள், நாடுகள் (ஜாதிகள்) மற்றும் கலாச்சாரங்களின் தோற்றத்தைக் குறித்து வாசிக்கிறோம் (ஆதியாகமம் 10).
- பழைய ஏற்பாட்டின் இந்த முதல் புத்தகத்தில் தான் மனித குலத்தின் பாவத்தின் பிறப்பிடம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் **"முதல் சுவிசேஷமாகிய" வருகிற "மேசியாவை"** குறித்து வாசகர்களுக்கு இங்குதான் அறிமுகப்படுத்தப்படுகிறது. (ஆதி 3:15) .

• முழு உலகத்திற்கும் ஆசிர்வாதம் அளிக்கக்கூடிய உத்தரவாதத்தை நிபந்தனையற்ற உடன்படிக்கையை தேவன் ஆபிரகாமோடு ஏற்படுத்தியதையும் இஸ்ரவேல் தேசத்தின் மிகச்சிறந்த தகப்பனாகிய முதல் யூதனாகிய ஆபிரகாமை குறித்தும் உண்மையில் புதிய ஏற்பாட்டில் அல்ல பழைய ஏற்பாட்டில் தான் நாம் கற்று அறிந்து கொள்ளுகிறோம். (ஆதி. 12:1-3; 15:1-21; கலா 3:7-9).

• உண்மையில் பவுல் இந்த உடன்படிக்கையைதான் பின்னர், முன்பே பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் என்று அடையாளப்படுத்துகிறார் (குறிப்பிடுகிறார்)

**கலாத்தியர் 3:8**

8. மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது.

**முக்கிய வேதாகம போதனைகளை நாம் புரிந்து கொள்வதில் பழைய ஏற்பாடு கணிசமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது.**

• எல்லா ஐந்து பிரதான உடன்படிக்கைகளை குறித்தும் பழைய ஏற்பாடு நமக்கு போதிக்கிறது (ஆதாமின், நோவாவின், ஆபிரகாமின், மோசேயின், தாவீதின் மற்றும் புதியவை).

• புனிதமான இடத்தையும் ஆலயங்களையும் பழைய ஏற்பாட்டின் மூலமாகவே நாம் சரியாக புரிந்து கொள்ள முடியும்

**ஆதலால் பழைய ஏற்பாடு பற்றியதான சரியான அறிவு இல்லாமல் கிறிஸ்தவர்கள் பின்வருவனவற்றில் அறியாமையின் இருளில் விடப்படுகிறார்கள்.**

• அவர்களின் சொந்த ஆரம்பம் (தோற்றம்),

• அடையாளம் (உயிரியலுக்குரிய மற்றும் ஆவிக்குரிய இரண்டும்),

• வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சுதந்திர பாகம் அத்துடன் மீட்பின் தேவைக்கான காரணம்.

• ஆதலால் எந்த ஒரு கிறிஸ்தவ தலைவர்களும் தாங்களாகவே வேண்டுமென்றே பழைய ஏற்பாட்டை தவிர்க்கிறார்களோ, அவர்கள் தாங்களாகவே போதக கடமையை அலட்சியம் பண்ணுகிறார்கள். (புறக்கணிக்கிறார்கள்)

### 3. புதிய ஏற்பாடு (முழுவதும்) பழைய ஏற்பாட்டின் மீது சார்ந்துள்ளது:.

புதிய ஏற்பாடு மொத்தம் **27** புத்தகங்கள் உள்ளடக்கிய ஒரு இலக்கிய தொகுப்பு புத்தகமாக இருக்கிறது என்று வேத பண்டிதர்கள் கணித்துள்ளனர். புதிய ஏற்பாட்டில் **கிட்டத்தட்ட 900 முறை** பழைய ஏற்பாட்டு வசனங்கள் நேரடி மேற்கோள் மூலமாகவோ,அல்லது மறைமுக வசன பிரதிபலிப்பின் மூலமாகவோ காட்டப்பட்டுள்ளன.

**பவுலின் நிருபங்கள் பழைய ஏற்பாட்டின் வசனங்களால் நிரப்பப்பட்டுள்ளன:**

• பவுல் தோராவிலிருந்து (பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்கள்) **45** முறை வசனங்களை மேற்கோள் காட்டியுள்ளார் .

• தீர்க்கதரிசிகள் **53** முறை மேற்கோள் காட்டப்பட்டுள்ளனர், அதிலும் ஏசாயா முதன்மையாக **36** முறை மேற்கோள் காட்டப்பட்டுள்ளார்.

• சங்கீதங்கள் **23** முறை மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

• இதர புத்தகங்கள் **10** முறை மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

• முழுமையான யூத வேதாகம பதிப்பு **183** பழைய ஏற்பாட்டு வசனங்களை பவுல் தன்னுடைய எழுத்துக்களில் மேற்கோள் காட்டியும் பொழிப்புரையாகவும் பயன்படுத்தியுள்ளார் என்று சுட்டிக் காட்டுகிறது.
• இந்த எண்ணிக்கையில் கூடுதலாக ஜனங்களை பற்றிய குறிப்புகள், மக்கள்தொகை, இடங்கள் மற்றும் பழைய ஏற்பாட்டின் சம்பவங்கள் சேர்க்கப்படவில்லை.
• அதிக எண்ணிக்கையிலான மேற்கோள்கள் ரோமர் நிருபத்தில் காணப்படுகின்றன ( ரோமரில் கிட்டத்தட்ட **84** முறை பழைய ஏற்பாட்டு பத்திகளில் மேற்கோள்களாகவோ பொழிப்புரையாகவோ காணப்படுகிறது)
• எபிரெயர் (பல வேத பண்டிதர்கள் பவுல் எழுதியதாக நம்புகிறார்கள், **83** பழைய ஏற்பாட்டு வசனங்களை அவர் பயன்படுத்தி இருக்கிறார்).

• பவுலின் மற்ற புத்தகங்களில், பழைய ஏற்பாட்டு வசனங்களை மேற்கோள் காட்டிய எண்ணிக்கை பின்வருமாறு:

- 1 கொரிந்தியர் (26);
- 2 கொரிந்தியர் (18);
- கலாத்தியர்கள் (14);
- எபேசியர் (12);
- பிலிப்பியர் (6);
- கொலோசியர் (3);
- 1 தெசலோனிக்கேயர் (1);
- 2 தெசலோனிக்கேயர் (7);
- 1 தீமோத்தேயு (4) மற்றும்
- 2 தீமோத்தேயு (9).

• புதிய ஏற்பாட்டில் பவுலின் இரண்டு மிகக் குறுகிய நிருபங்களான தீத்து மற்றும் பிலேமோன் மட்டுமே பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள்களைக் கொண்டிருக்கவில்லை.
• பவுல் தன்னுடைய போதனைகளுக்கு உறுதுணையாக எபிரெய வேதாகமத்தைப் பயன்படுத்தினார் என்பது இந்த புள்ளிவிவரங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. உண்மையில், பவுல் தன்னுடைய போதனைகளுக்கு பழைய ஏற்பாட்டையே ஒரு அதிகாரத்துவமாக தொடர்ந்து பயன்படுத்தினார்.
அதே வேதாகமத்தைப் பற்றி பவுல் வெளிப்படையாக என்ன சொன்னார்?
**II தீமோத்தேயு 3: 16 – 17**-யில் பவுல் இவ்விதமாக எழுதுகிறார்,
16. வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,
17. அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.

### 4. பழைய ஏற்பாடுதான் இயேசுவின் ஒரே வேதமாக இருந்தது:

**மத்தேயு 5:17**
17. நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.

• அவருடைய 40 நாள் சாத்தானின் துன்புறுத்தலின்போது அவர் தன்னை சாத்தானிடத்தில் இருந்து தற்காத்துக் கொள்ளும் படியாக பழைய ஏற்பாட்டின் பகுதிகளையே ஒரு ஆயுதமாக பயன்படுத்தி மேற்கோள்காட்டினார் (மத் 4:1-11).
• நித்திய ஜீவனைப் பெற ஒருவர் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோது, இயேசுவின் பதில் பழைய ஏற்பாட்டை நேரடியாக மேற்கோள் காட்டுவதாக இருந்தது (மாற்கு 10:19).
• தேவ கட்டளைகளில் மிகப்பெரிய கட்டளை எதுவென்று அவரிடத்தில் விசாரித்த போது இயேசுவின் பதில் பழைய ஏற்பாட்டை தொகுத்து அதிலிருந்து மேற்கோள் காட்டி சொல்லுவதாக மட்டுமே இருந்தது (மத் 22:34-40).
• விவாகரத்து என்னும் கடினமான( முட்களைப் போன்ற) பிரச்சனைகளை குறித்து அவர் போதிக்கும் போது இயேசு நேரடியாக பழைய ஏற்பாட்டை மேற்கோள் காட்டி, சிருஷ்டிப்பின் தொகுப்பை குறித்ததான உண்மையையும் அத்துடன் விவாகம் என்னும் தெய்வீக கட்டமைப்பின் உண்மையையும் (சத்தியத்தையும்) உறுதிப்படுத்துகிறார். (மத் 19:4-6).
• மெய்யாகவே அவர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்பதையும் அத்துடன் வேதாகமத்தின் மீட்பின் கருப்பொருளின் உருவகம் என்பதை நிரூபிப்பதற்காக பழைய ஏற்பாட்டை அவர் மேற்கோள்காட்டுகிறார் (லூக்கா4:16-21; 24:25-27; யோவான் 5:39).

**லூக்கா 24:44**
44. அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார்.
• ஒரு கிறிஸ்தவ போதகர், ஆசிரியர், எழுத்தாளர், பழைய ஏற்பாட்டில் தேவனின் வார்த்தையை அதிகாரப்பூர்வ **வார்த்தையல்ல** என்று நீக்கம் செய்தால் அவர் தாமே இயேசுவின் பிரசங்க முறைக்கு (உபதேச முறைக்கு) எதிராக நேரடியாக முரண்படுகிறார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்

**5. பழைய ஏற்பாடு ஆதித் திருச்சபையின் ஒரே வேதமாக இருந்தது.**
**II தீமோத்தேயு 3:15**
15. கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.
• இங்கே குறிப்பிட்ட பட்டுள்ள “வேதம்” என்கிறது தீமோத்தேயுவுக்கு சிறுவயதிலிருந்தே பழைய ஏற்பாடாக மட்டுமே இருந்திருக்க முடியும். (2 தீமோத்தேயு 3:15),
- பழைய ஏற்பாட்டை மேற்கோள் காட்டி **ரோமர் 3:2-** ல் பவுல் யூத மக்களை குறித்து இவ்வாறு சொல்லுகிறார்,
2. அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது; **தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது** விசேஷித்த மேன்மையாமே.

• பழைய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள பல்வேறு சம்பவங்களைக் குறிப்பிட்டு, **I கொரிந்தியர் 10:11**
பவுல் நமக்குச் சொல்லுகிறார்.

11. இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள **நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது**.

• **எபிரெயர் 3:7,8 -** இல் பவுல் பழைய ஏற்பாட்டு வார்த்தைகளை நேரடியாக ஊக்குவிக்கும் வண்ணமாக பரிசுத்த ஆவியானவரை குறித்து பேசுகிறார்**,**

7. ஆகையால், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், 8. வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்.

- பழைய ஏற்பாட்டைக் குறிப்பிட்டு **எபிரெயர் 4:12** பவுல் எழுதுகிறார்**.**

12. தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.

**6. பழைய ஏற்பாட்டில் இயேசு மறைந்திருக்கிறார், புதிய ஏற்பாட்டில் இயேசு வெளியரங்கமாய் இருக்கிறார்.**

இயேசுவுடனான தனது முதல் சந்திப்புக்குப் பிறகு, பிலிப்பு நாத்தான்வேலுக்கு அறிவித்தார்:

**யோவான் 1:45**

45. பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு: **நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்;** அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்.

இயேசு தாமே சொல்லியிருந்தார்,

**யோவான் 5:39**

39. வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள்; **அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே,** என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே.

**யோவான் 5: 46,47.**

46. நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள்; **அவன் என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே.** 47. அவன் எழுதின வாக்கியங்களை நீங்கள் விசுவாசியாமலிருந்தால் நான் சொல்லுகிற வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்கள் என்றார்.

எம்மாவூர் சீடர்களுக்கு,

**லூக்கா 24: 25 – 27**

25. அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: **தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும்** விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே, 26. கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி, 27. **மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்**.

**7. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் நாம் ஒரே தேவனையே சந்திக்கிறோம்:**

எபிரெயர் புத்தகம் எவ்வாறு தொடங்குகிறது என்பதைக் கவனியுங்கள்.

**எபிரெயர் 1: 1-4**

1.பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், **தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன்**, 2. **இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்;** இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு **உலகங்களையும் உண்டாக்கினார்**.

3. இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார். 4. இவர் தேவதூதரைப்பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்.

- பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள் மூலம் பேசிய அதே தேவன் இன்று இயேசுவின் மூலமாக பேசுகிறார்.
- இப்போது, நீங்கள் கேட்கலாம், "ஆனால் பழைய ஏற்பாட்டின் தேவன் கோபமும், பாரமும் நிறைந்தவராய் இருக்கின்றார் அல்லவா?" அப்படி இருக்க, புதிய ஏற்பாட்டின் தேவன் "கிருபையும், விடுதலையும் உடையவராய் இருக்கின்றாரே?"
- முதலில் பழைய ஏற்பாட்டிலிருந்தும் பின்னர் புதிய ஏற்பாட்டிலிருந்தும் சில உரை பகுதிகளை கவனிப்போம்.

**யாத்திராகமம் 34:6**

6. **கர்த்தர்** அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: **கர்த்தர்**, **கர்த்தர்**, **இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும்,** சத்தியமுமுள்ள தேவன்.

வழி தவறிய ஜனங்களை தேவன் ஏன் தொடர்ந்து மன்னித்து பாதுகாக்கிறார் என்பதை தெளிவுபடுத்தும் வகையில் பழைய ஏற்பாடு அநேக முறை இந்த உண்மையை தொடர்ந்து வலியுறுத்துகிறது :

**II இராஜாக்கள் 13: 22 – 23**

22. யோவாகாசின் நாட்களிலெல்லாம் சீரியாவின் ராஜாவாகிய ஆசகேல் இஸ்ரவேலை ஒடுக்கினான். 23.ஆனாலும் **கர்த்தர் அவர்களுக்கு இரங்கி**, ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடு செய்த தமது உடன்படிக்கையினிமித்தம் அவர்களை அழிக்கச் சித்தமாயிராமலும், அவர்களை இன்னும் தம்முடைய முகத்தைவிட்டுத் தள்ளாமலும் அவர்கள்மேல் **மனதுருகி,** அவர்களை நினைத்தருளினார்.

**நெகேமியா 9: 30-31**

30. நீர் அநேக வருஷமாக அவர்கள்மேல் **பொறுமையாயிருந்து**, உம்முடைய ஆவியினால் பேசின உம்முடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டாலும், அவர்கள் செவிகொடாதபடியினாலே, அவர்களை அந்நிய தேசஜனங்களின் கையில் ஒப்புக்கொடுத்தீர்.

31. **ஆகிலும்** உம்முடைய **மிகுந்த இரக்கங்களின்படியே**, அவர்களை நிர்மூலமாக்காமலும் அவர்களைக் கைவிடாமலும் இருந்தீர்; நீர் **கிருபையும் இரக்கமுமுள்ள தேவன்**.

- **இவ்வாறு. பழைய ஏற்பாட்டில் தேவனின் கிருபை எப்படி நிறைந்து இருக்கிறதோ, அதே போலவே புதிய ஏற்பாட்டிலும் தேவனின் கிருபை நிறைந்திருக்கிறது.**

• **மேலும், புதிய ஏற்பாட்டில் , இயேசு வேறு எவரையும் விட நரகத்தைப் பற்றி அதிகம் பேசுகிறார்.**

**மத்தேயு 10:28**

28. ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; **ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.**

**மத்தேயு 18:6**

6. என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, **அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி**, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.

**எபிரெயர் 10:26 – 29**

26. சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், 27. நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் **கோபாக்கினையுமே** இருக்கும். 28. **மோசேயினுடைய பிரமாணத்தைத்** தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; 29. தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் **எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பானென்பதை யோசித்துப்பாருங்கள்**.

இவ்வாறு தேவன் பழைய ஏற்பாட்டில் உள்ளது போலவே புதிய ஏற்பாட்டிலும் கோபம் நிறைந்தவராகவே இருக்கின்றார்.

**புதிய ஏற்பாட்டில் நாம் சந்திக்கும் அதே தேவனையே பழைய ஏற்பாட்டிலும் நாம் சந்திக்கிறோம்.**

**"எனவே பழைய ஏற்பாடு நிராகரிக்கப்பட தக்கவை அல்ல"**